**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 24.05.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் மத்திய பட்டு மரபணு வள ஆராய்ச்சி நிலையத்திற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்

மல்பெரி பழம் மற்றும் மதிப்புக்கூட்டல் குறித்த ஆராய்ச்சி மேற்கொள்வது தொடர்பாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் ஓசூரில் அமைந்துள்ள மத்திய பட்டு மரபணு வள ஆராய்ச்சி நிலையம் இணைந்து 23.05.2025 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டன.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் துணைவேந்தர் (பொறுப்பு) முனைவர். இர.தமிழ் வேந்தன் மற்றும் மத்திய பட்டு மரபணு வள ஆராய்ச்சி நிலைய இயக்குநர் முனைவர். இசிதா நாயக் அவர்களால் பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர் முனைவர். மூ.சாந்தி, அவர்களின் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், மேட்டுப்பாளையத்தில் அமைந்துள்ள வனக்கல்லூரி மற்றம் ஆராய்ச்சி நிலையத்தில் இயங்கிவரும் பட்டுப்புழுவியல் துறையில், அதிக பழ மகசூலை கொடுக்கக் கூடிய மல்பெரி இனங்களை கண்டறியவும் மற்றும் மல்பெரி பழத்திலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்கவும் ஏற்றவாறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பல உயரிய சத்துக்களை உள்ளடக்கிய மல்பெரி பழங்களின் பயன்பாடு மேம்பட வாய்ப்புள்ளது என தெரிய வருகிறது.

இந்த ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்வில், மத்திய பட்டு மரபணு வள ஆராய்ச்சி நிலையம் சார்பில் முனைவர். திரிவேணி மற்றும் முனைவர். லோகேஷ் குமார் ஆகிய விஞ்ஞானிகள் பங்கேற்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை முனைவர். கு. அ. முருகேஷ், பேராசிரியர் மற்றும் தலைவர், பட்டுப்புழுவியல் துறை, முனைவர். ப. பிரியதர்ஷினி, உதவிப் பேராசிரியர் (பட்டுப்புழுவியல் துறை) சிறப்பாக செய்திருந்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**